Registered No. M. 4018.

30 MAY 1945

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 7 | April 1945 | No. 4

விஷய சூசிகை. பக்கம்

M K. முக்கர்ஜி அவர்களின் தென் இந்தியா யாத்திரை	1
யோகரத்நாகரம்	11—14

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு	பக்கம் 1-க்கு	ரூ 8
,,	,, ½-க்கு	ரூ 4
,,	,, ¼-க்கு	ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No. 2, Police Station West Lane, Madura.

ட்] [விலை 0—3—0

ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—45.

SL
L:5m24,M25vc.
M45.74.
210240

அகில இந்திய ஆயுர்வேத காங்கிரஸ் தலைவர்.

ஆயுர்வேத சாஸ்திரீ ஸ்ரீமான் M. K முக்கர்ஜி அவர்கள் தென் இந்தியா யாத்திரை.

அகில பாரத ஆயுர்வேத காங்கிரஸ் நாளுக்குநாள் அபிவிருத்தி யடைந்துவருகின்றது, பிரசார வேலைகளாலும் நேர் தொடர்பாலும் ஆயுர்வேத வைத்தியர்கள் விழிப்பாலும் ஷெ காங்கிரஸ் ஓர் பிரம் மாண்டமான ஸ்தாபனமாக வளர்வதுடன் விஸ்தாரமான நமது தாய்நாட்டில் ஆயுர்வேத சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு உறுப்புகளின் தேவைகளை உடனுக்குடன் நேரில் கவனிக்க காங்கிரஸ் தலைவர் அவர்களுக்கு ஓர் ஆகாசவிமானம் வேண்டியிருக்குமென்பது மிகை யாகாது. சென்ற வருஷம் டிசம்பரில் மூன்று மாகாணங்களில் நடந்த மாகாண கான்பரன்சுகளில் தலைவர் அவர்களுடைய விஜயம் கோரப் பட்டது. தமிழ்மாகாணம், யு. பி. மாகாணம், ராஜபுதானா, ஆகிய இந்த மூன்று இடங்களிலும் சற்றேறக்குறைய ஒரே காலத்தில் மாகாண கான்பரன்சுகள் நடந்தன. இவைகளுள் இரண்டு மாகா ணங்களின் அழைப்பை காங்கிரஸ் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது. ஒரு கான்பரன்ஸுக்கே விஜயம் செய்ய முடிந்தது. ஒருவருஷமாக அவர்கள் வரவை எதிர்பார்த்து காத்திருந்த குருகுல யூனிவர்சிடியின் ஆயுர்வேத பரிஷத்தின் வேண்டுகோளுக்கும் இணங்கமுடியவில்லை. பெரில்லியில் நடந்த யு. பி. மாகாண கான்பரன்சுக்கு விஜயம்செய்த பிறகு டில்லியி லிருந்து ஹரித்வார் போகும் வழியில் சமீபகாலத்தில் பெஜவாடா வில் நடைபெறப்போகும் ஆயுர்வேத காங்கிரஸுக்கு தலைமை வகிக்க சரியானகாலத்தில் போய் சேருவதற்காக கல்கத்தாவில் தலைமை ஸ்தானத்திற்குப் போகும்படி வேலைகளை சீக்கிரம் முடித் துக்கொள்ளவேண்டியதாயிற்று. 1944ஹு டிசம்பர் கடைசியில் பெஜவாடாவில் நடந்த 33-வது ஆயுர்வேத காங்கிரஸைப்பற்றி அதிகம் வர்ணிக்கத்தேவையில்லை. ஒப்புயர்வற்ற ஷெ காங்கிரஸ் மகாமண்டல சரித்திரத்தில் இதுவரை காணாதபடி நீண்ட நாட்கள் அதாவது ஒருவாரம் நடைபெற்றது. அடுத்த 34-வது காங்கிரஸை கர்நாடக தேசத்தில் நடத்தவேண்டுமென்று வந்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1945ஹு ஜனவரிமீ 5உ மஞ்சேசு வரத்தில் நடைபெறும் 14-வது கர்நாடக ஆயுர்வேத சம்மேளனத்தை

பட்டினி கூடாது. காய்ச்சல்களில் திரிதோஷப்பிரகோபமே நோயாளிகளுக்கு பட்டினியைத் தாங்கும் சக்தியை யளிக்கின்றது, திரிதோஷப்பிரகோபம் இல்லாவிட்டால் யாரும் பட்டினியைத் தாங்கமுடியாது. வாதஜ்வரங்கள் ஏழு நாட்களிலும், பித்தஜ்வரங்கள் பத்துநாட்களிலும், கபஜ்வரங்கள் 12 நாட்களிலும் பாகத்தை யடையும். வேறு நூல்கள் கூறுவதாவது—வாதஜ்வரங்கள் இரண்டு நாட்களிலும், பித்தஜ்வரங்கள் ஒரு நாளிலும், கபஜ்வரங்கள் நான்கு நாட்களிலும், வாதபித்தஜ்வரங்கள் ஏழுநாட்களிலும், கபபித்தஜ்வரங்கள் பத்துநாட்களிலும், கபவாதஜ்வரங்கள் 12 நாட்களிலும், சன்னிபாதஜ்வரங்கள் 21 நாட்களிலும் பாகத்தை யடைகின்றன. எல்லாக்காய்ச்சல்களிலும் முதல் ஏழுநாள் தருணஜ்வரமெனப்படும். ஏழுக்குமேல் 12 நாள் வரை மத்யம் அல்லது பச்யமானஜ்வரமெனப் பெயர், அதற்குமேல் ஜீர்ணஜ்வரம் அல்லது பழங்காய்ச்சல் எனச் சாதாரண வழக்கத்தில் சொல்லப்படும். ரஸம் முதலிய ஏழு தாதுக்களில் கலந்திருக்கும் பிரகோபத்தை யடைந்தத் திரிதோஷங்கள் ஏழுநாட்களில் பாகத்தை யடைகின்றன. ஏழு நாட்களுக்கு மேல் அக்காய்ச்சல்கள் நிராமங்கள் எனப்படும். இது கரநாதர் என்பவர் மதம். விருத்த வாக்படர் கூறுவதாவது—எல்லாக்காய்ச்சல்களிலும் ஏழாவது நாளில் கஷாயம் கொடுக்கலாம். இதை நியமமாகக்கொள்ளக்கூடாது. நோயாளிக்குக் காய்ச்சல் நன்றாகப்பாகமடையும்வரை பட்டினி செய்துவைக்கவேண்டும். தருணஜ்வரத்தில் துவர்ப்பு மருந்து கொடுக்கக்கூடாது. துவர்ப்பு மருந்தால் திரிதோஷங்கள் மறுபடியும் பிரகோபமடைந்து கெடுதலை விளைவிக்கும். விதேஹர் கூறுவதாவது—எல்லாஜ்வரங்களிலும் ஏழாவது நாள் இலகுவான ஆகாரம் கொடுக்கலாம். ஆகாரம் காய்ச்சல் விட்ட சமயத்தில் செய்துவைக்கவேண்டும், இல்லாவிட்டால் ஜ்வர வேகம் அதிகமாகும். தோஷம், தாது, மலம், ஆகிய இவை பாகம் அடைந்த பிறகு பசியுண்டாகும். அது சரியான காலமாகவோ அல்லது அகாலமாகவோ இருந்தாலும் அதையே ஆகாரகாலமாகக் கொள்ள வேண்டும். வாக்படர் கூறுவதாவது—ஜ்வரமிருந்தாலும் அல்லது நின்றிருந்தாலும் சாயங்காலத்தில் நோயாளிக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும். ஏனெனில் அக்காலத்தில் கபம் குறைந்து அக்கினிபலம்

மிகுந்திருக்கும். அல்லது உசிதமான காலத்தில் தேகம், ஸாத்மியம். இவைகளை அனுசரித்து ஏற்ற ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும். கஷாயம், குடிநீர், ஆகாரம் ஆகிய இவைகளை முதல்பத்துநாள் உபயோகிக்கவேண்டும். ஜ்வரத்தில் சரீரத்தில் உஷ்ணத்தைக்காணுகின்றோம். இவ்விதம உஷ்ணமதிகரிப்பது பித்தத்தால், ஆகையால் எல்லாக் காய்ச்சல்களிலும் பித்தத்தை அதிகப்படுத்தும், ஆகாரங்களைச் சாப்பிடக்கூடாது. விசேஷித்து பித்தஜ்வரத்தில் பித்தத்தை அதிகப்படுத்தும் ஆகாரங்களை விலக்கவேண்டும். ஸ்நானம், அப்யங்கம் மேல்பூச்சு இவைகளையும் விலக்கவேண்டும். அஜீர்ணரோகத்தில் கடுமையான நிலைமையில் மருந்துகள் சாப்பிடக்கூடாதென்றும் மீறிச்சாப்பிட்டால் ஆமம் அதிகமாகி நோய் அதிகரிக்குமென்றும் நூல்கள் கூறுகின்றன. அவ்விதமே ஜ்வரங்களில் ஆமம் மிகுந்து வலியும் கடுமையாக இருக்கும் நிலைமையில் மருந்து சாப்பிடக் கூடாது. பித்தஜ்வரங்களில் கசப்பு ரஸமும், கபஜ்வரங்களில் கார ரஸமும் விசேஷித்து உபயோகிக்கவேண்டும். துவர்ப்பு ரஸம் பித்தகபஹரமாக இருந்தபோதிலும் ஆரம்பஜ்வரங்களில் உபயோகிக்கக்கூடாது. ஏனெனில் துவர்ப்பு ரஸம் மலபந்தத்தை யுண்டு பண்ணும். தவிர விஷமஜ்வரங்கள், அரோசகம், ஓக்காளம், விக்கல் வயிறுப்பொருமல் இவை முதலியவைகளையும் உண்டுபண்ணும். காய்ச்சல் ஆரம்பதினத்திலிருந்து ஏழுநாள் கழித்து மருந்து கொடுக்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். சிலர் பத்துநாட்களுக்குப்பிறகு மருந்து கொடுக்கவேண்டுமென்கின்றனர். சிலர் லகுவான ஆகாரம் சாப்பிட்டபிறகு மருந்து கொடுக்கவேண்டுமென்றும் ஆமம் மிகுந்திருந்தால் மருந்து கொடுக்கக் கூடாதென்றும் சொல்லுகின்றனர். தீவ்ரமான ஜ்வரமுள்ள நோயாளிக்கு திரிதோஷவேகம் மிகுந்திருக்கும்போதும், அல்லது திரிதோஷங்கள் மிகவும் ஸஞ்சய நிலைமையையடைந்து. தந்திரை, சீரம் விளைத்தல், இவைகளை உண்டுபண்ணும் பொழுதும் மருந்து கொடுத்தால அது ஜீர்ணமாகாமல் ஜ்வரவேகத்தை அதிகப்படுத்தும். ஆகவே காய்ச்சல் மிருதுவாகவும், சரீரம் இலகுவாகவும் திரிதோஷங்கள் பிரகோபநிலை தணிந்துவரும் நிலைமையில் ஆரம்பஜ்வரத்திலும் மருந்து கொடுக்கலாம். விருத்த வாக்பட்டர் கூறுவதாவது—வாதஜ்வரங்களில்

14 APR 1945

ஆறுநாட்களுக்குப்பிறகும், பித்தஜ்வரங்களில் பத்து நாட்களுக்குப்பிறகும், கபஜ்வரங்களில் 12 நாட்களுக்குப் பிறகும் ஆகாரம் கொடுக்கவேண்டும். த்வந்த்வஜ்வரங்களிலும் சன்னிபாத ஜ்வரங்களிலும் ஜ்வரமும்மூரம் தணிந்தபிறகேயவாகு, யூஷம், முதலிய கஞ்சிவகைகளைத் தக்கபடி யோசித்து உபயோகிக்கவேண்டும். யூஷம், பேயா், யவாகு, என்ற கஞ்சி வகைகளில் பயறு, தட்டைப் பயறு, கொத்துக்கடலை, கொள்ளு, வயல்பயறு, இவைகளிலொன்றை உபயோகிக்கலாம். சக்ரதத்தர் கூறுவதாவது—ஆரம்ப ஜ்வரங்களில் பகல் தூக்கம், ஸ்நாநம், சாப்பாடு, கோபம், அதிகக்காற்று, சரீரப்பயிற்சி, துவர்ப்பு வஸ்துக்கள், ஆகிய இவைகளை விலக்க வேண்டும். காற்றில்லாத வீட்டில் வாசம், சுடுநீர், அதிகப்பேச்சின்மை, கோபம், காமம், சோகம், ஆகிய இவைகளின் விலக்கு. ஆகிய இவை நல்லது. சுடுநீர் குணம்—கபம், மேதஸ், வாயு, ஆமம் இவைகளைப்போக்கும், தீபனம் செய்யும், மூத்திரப்பையைச் சுத்தப்படுத்தும், காஸம், சுவாஸம் ஜ்வரம், இவைகளைப்போக்கும். எந்த சமயத்திற்கும் ஏற்றது. சுடுநீர் தயாரிக்கும் விதம்—கொதிப் படங்கி, நுரையடங்கி, தெளிவாகவும், பாதியளவு வற்றியதும் சுடுநீராகும். நீர் கால்பாகம் சுண்டினால் அது வாதஹரம், பாதியளவு வற்றினால் அது பித்தஹரம், முக்கால்பாகம் வற்றவைத்தால் அது கபஹரம், இது பாசனம், தீபனம், இலகுவானது. இந்த ஜலம் த்வந்த்வஜ்வரங்களிலும் சன்னிபாதஜ்வரங்களிலும் நன்மை செய்யும். ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பாதி அல்லது கால்வாசி வற்றின நீரும், மார்கழி தை மாதங்களில் கால்வாசி வற்றின நீரும் மாசி பங்குனி சித்திரை வைகாசி ஆனி ஆடி மாதங்களில் பாதி வற்றின நீரும், ருதுக்கள் மாறுபாடடைந்த சமயங்களில் அதாவது வெய்யில் காலத்தில் மழையும், மழைகாலத்தில் வெய்யிலும், இது போல மாறுபட்ட காலங்களிலும் பாதி வற்றின நீரும், ஆவணி புரட்டாசி மாதங்களில் எட்டில் ஒன்றாக வற்றின நீரும்உபயோகிக்க வேண்டும். இவ்விதம் உபயோகிப்பதால் வாயு சமனத்தையடையும் கபமும் விலகும். இரவில் சுடுநீர் உபயோகித்தால் அஜீர்ணம் விலகும். சுடுநீரின் அதிகமான உஷ்ணத்தைக் குறைப்பதற்காக இரண்டு பாத்திரங்களில் தாரையாகவிட்டு ஆற்றினால் அப்பொழுது ஆகாயத்திலுள்ள காற்று படுவதால் அந்த நீர் விசேஷமான குணத்தை

210240

யடைவதுடன் ஜரிப்பதும் கஷ்டமாகும். ஆகவே தண்ணீரை ஒரே பாத்திரத்தில் வைத்து உஷ்ணம் தணிந்தபிறகு குடிக்கவேண்டும், சுடுநீரை நன்ருக ஆறினபிறகு உட்கொண்டால் அது திரிதோஷ ஹரம், பகலில் காய்ச்சின நீரை ராத்திரியில் உபயோகித்தால் அது குருகுணத்தைச்செய்யும், அவ்விதமே இரவில் காய்ச்சின நீர் பகலில் குருகுணத்தையடையும். பச்சைநீரை ஓர் பாத்திரத்தில் வைத்து காய்ச்சின இரும்புத்துண்டுகள் அல்லது செங்கல்களை அதில் போட்டு இவ்விதம் தயாரான சுடுநீர் திரிதோஷஹரம் வியாதியை விலக்கும். காஸம். திரிதோஷப் பிரகோபம். தாகம், ஆகிய இவைகளில் உஷ்ணஜலம் சாப்பிடுவது நல்லது. முன்சொன்னவிதமாக உசிதம்போல சுடுநீர் தயாரித்து அதை ஆறினபிறகு சாப்பிட்டால் அது திரிதோஷஹரமாகும், உஷ்ணமாகவே சுடுநீரை அடியில் கண்ட நிலைமைகளில் உபயோகிக்கவேண்டும். ஆமபஜ்வரம், பீனசம், பார்சுவவலி; தொண்டையடைப்பு, வாந்தி அல்லது பேதிக்கு சாப்பிட்ட தினம், வயிற்றுப்பொருமல், வாதநோய், கபநோய், அரோசகம், கிரஹணீ, குன்மம், சுவாஸம். விப்புருதி, விக்கல், ஸ்நேஹபானம், ஆகிய இவைகளில் சூட்டுடன் நீர் குடிக்கவேண்டும், அரோசகம், பீனசம், ஒக்காளம், வீக்கம், க்ஷயம், அக்னிமந்தம், மகோதரம், குஷ்டம், ஜ்வரம். கண்நோய், விரணம், மதுமேஹம், ஆகிய இவைகளில் நீரைக்கொஞ்சமாகக் குடிக்கவேண்டும். மூர்ச்சை பித்தம், உஷ்ணம், எரிச்சல், மதாத்யயம், கிறுகிறுப்பு, ஆயாசம், வாந்தி, மேல்நோக்கின ரக்தபித்தம், ஆகிய இவைகளில் குளிர்ந்தநீர் சாப்பிடவேண்டும். ஐப்பிசி கார்த்திகை மாதங்களில் தண்ணீர் குடிக்கலாம். சித்திரை வைகாசி மாதங்களில் நீரைக்கொஞ்சமாக உட்கொள்ளவேண்டும். ஐப்பிசி கார்த்திகை மாதங்களில் ஆற்று நீரைக்குடிக்கலாம். சித்திரை வைகாசி மாதங்களில் நதிஜலத்தை உட்கொள்ளலாகாது. மழை காலத்திலும் வசந்த காலத்திலும் கிணற்றுநீரை உபயோகிக்கவேண்டும். சரத்காலத்தில் குளத்து நீரை உபயோகிக்கலாம். மற்ற மூன்று ருதுக்களிலும் அதாவது ஆனி, ஆடி, மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் ஆற்று நீரை உபயோகிக்கலாம், இனி மருந்துகளை உபயோகிக்க வேண்டிய அளவு சொல்லப்படுகிறது. நல்ல திருட சரீரமுள்ள வாலிபனுக்கு

திறந்து வைக்கவரவேண்டுமென்று கர்நாடக மண்டலத் தலைவரிடமிருந்துவந்த வேண்டுகோளை காங்கிரஸ் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. பெஜவாடாவிலிருந்து மஞ்சேசவரம் ஏறக்குறைய 700 மைல் தூரத்திலுள்ளது. காங்கிரஸ் தலைவர் அவர்களுக்கு ரெயில் ஸ்டேஷனில் ராஜோபசாரம் செய்யப்பட்டது. ஒருமைல் நீளம் ஜனக்கூட்டமுள்ள ஓர் ஊர் வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலம் ஸ்ரீ வைகுண்ட பக்த அவர்களின் மாளிகையையடைந்து நின்றது. ஸ்ரீ வைகுண்ட பக்த அவர்கள் அந்த பிரதேசவாஸியான ஜமீன்தார் அவர்களை வரவேற்புக்கமிட்டித் தலைவருமாவார். கான்பரன்சுக்குத் தலைமை வகிக்கவேண்டியவர் காங்கிரஸ் தலைவர் அவர்களுக்கு முக்கிய நண்பர் அவர் மகாமண்டலத்துடன் சேராமல் தலைவர் ஆஸனத்தில் வீற்றிருக்கக் கூடாதென காங்கிரஸ் தலைவர் அவர்கள் சொன்னதின்பேரில் மகாமண்டலத்தின் ஆயுள் மெம்பராக ஆனார். அவர் பெயர் ஸ்ரீ பார்த்தநாராயண பண்டிட். காங்கிரஸ் தலைவர் அவர்கள் வடமொழியில் ஓர் சிறிய ஆரம்ப உபந்யாசம் செய்தபிறகு ஷை கான்பரன்ஸ் தலைவர் அவர்கள் சுத்த ஆயுர்வேதத்தைப்பற்றி ஓர் அத்புதமான உபந்யாசம் செய்தார். கர்நாடக மாகாணத்தின் பலபாகங்களிலிருந்தும் ஏராளமான வைத்தியர்கள் விஜயம் செய்திருந்தனர். உள்ளூர் கனவான்களும் படித்த பெரியோர்களும் பிரசன்னமாகவிருந்தனர். சபையோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி காங்கிரஸ் தலைவர் அவர்கள் ஆங்கிலத்தில் ஆயுர்வேதத்தின் தக்கால நிலைமை ஆயுர்வேதத்தின் பெருமை என்பதைப்பற்றி ஒரு மணிநேரம் பேசினார்கள். மஞ்ஜேசுவரத்திலுள்ள ஜமீந்தார்கள் காங்கிரஸ் தலைவரிடம் பங்காள கஷ்டநிவாரணத்திற்காக நன்கொடையளித்தனர். பிறகு கர்நாடக மண்டலத்தலைவர் ஸ்ரீமான் டாக்டர் பட் அவர்களுடன் சேர்ந்து காங்கிரஸ் தலைவர் அவர்கள் மங்களூருக்குப் பிரயாணமானார்கள். வரப்போகும் ஆயுர்வேத காங்கிரஸை நடத்த சில இடங்கள் அங்கு பரிசீலனை செய்யப்பட்டன. கர்நாடக மாகாணம் வரும் ஆயுர்வேத காங்கிரஸை சென்றவருஷத்தைவிட சிறப்பான முறையில் நடத்தவிரும்புகிறது. 1945 ௵ ஜனவரி ௴ 7௳ மங்களூரில் காங்கிரஸ் தலைவர் அவர்களுக்கு மெடிகல் எலெக்டிரிகல் லேபரேடரீஸ் கம்பெனியார்

10240

14 APR 1945
MADRAS

சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஷை கம்பெனி ஓர் ஆயுர்வேத ஔஷதசாலை, ஆஞ்சலபாணியில் பெயர்மாத்திரம் அமைந்துள்ளது. ஷை கம்பெனி கல்கத்தாவில் மலேரியா நிவாரண வேலைக்காக மலேரியா மருந்துகளை காங்கிரஸ் தலைவரிடம் அளித்தது. மங்களூரிலுள்ள ஓர் ஆயுர்வேத தர்மவைத்யசாலைக்கு காங்கிரஸ் தலைவர் அவர்கள் விஜயம் செய்தனர். காங்கிரஸ் தலைவர் அவர்களுக்கு மரியாதைசெலுத்த பல வைத்தியர் அங்கு குழுமியிருந்தனர். பண்டிட் B. R. ஹரிதாஸ் அவர்கள் 8உ பேட்டிகண்டனர். முல்கி என்ற இடத்தில் கோவில் மஹந்துமகராஜ் அவர்கள் ஷை கோஷ்டிக்கு விருந்தளித்தனர். மஹந்த் அவர்கள் ஆயுர்வேதத்தில் மிக அபிமானமுள்ளவர், அவர்களுக்கு ஹிந்தி தெரியும், வரப்போகும் காங்கிரஸை அவ்விடத்தில் நடத்த ஒப்புக்கொண்டார், தென் இந்தியாவில் கோவில்களுக்கு ஏராளமான சொத்து உண்டு, இந்த மஹந்து அவர்களுக்கு முன்னிருந்தவர் ஆயுர்வேத பண்டிதருமாவார். கல்கத்தா நிவாரண நிதிக்கு நன்கொடையும் கிடைத்தது. பிறகு காங்கிரஸ் தலைவர் தன் கோஷ்டியுடன் உடுப்பி சென்றனர். பிரசித்திபெற்ற ஷிரூர்மடம் ஷை கோஷ்டியை உபசரித்தது. மடாதிபதிகள் ஸம்ஸ்கிருதத்தில் மிகவும் தேர்ச்சியுள்ளவர்கள், அவ்விடத்தில்ஏராளமான வைத்தியர்கள் கூட்டத்தில் மடாதிபதிகளின் தலைமையில் காங்கிரஸ் தலைவர் அவர்கள் உபன்யசித்தார்கள், பல வைத்தியர்கள் ஆயுர்வேத காங்கிரஸின் அங்கத்தினர்களாகத் தங்களை பதிவுசெய்து கொண்டனர், ஜனவரி மீ 9உ அவ்விடத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. டாக்டர் சுந்தரம் என்ற ஆங்கில வைத்தியர் தலைமை வகித்தார்கள். காங்கிரஸ் தலைவர் அவர்களுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஆமோதித்து அழுத்த திருத்தமாகப் பேசினார்கள். ஷிரூர் மடாதிபதிகள் உடுப்பியில் வரப்போகும் காங்கிரஸை நடத்த மனப்பூர்வமான விருப்பத்தை தெரிவித்தார்கள். இது பெரிய மடம், இதற்கு எட்டு கிளைகள் இருக்கின்றன, ஒவ்வொரு கிளைக்கும் ஓர் மஹந்து இருக்கிறார். மடத்தால் நிர்வகிக்கப்படும் பாடசாலையில் ஓர் ஆயுர்வேத வகுப்பை நடத்தவேண்டுமென காங்கிரஸ் தலைவர் கேட்டுக்கொண்டனர்.

தொடரும்.

210240.